வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண் 2829 / அ1 / 2022 நாள் 25-09-2022

பொருள் பள்ளிக் கல்வி – வேலூர் மாவட்டம் – அமைச்சுப் பணி – அனைத்து வகை பணியாளர்களுக்கான மாறுதல் – அலுவலகம் மற்றும் அரசுப் பள்ளிகளில் மூன்று ஆண்டுகளுக்கு மேல் ஒரே பணியிடத்தில் பணிபுரிபவர்களுக்கு மாறுதல் – விருப்ப மாறுதல் வழங்குதல் நெறிமுறைகள் சார்பு.

பார்வை சென்னை தமிழ்நாடு பள்ளிக் கல்வி ஆணையரக இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி) செயல்முறைகள் ந.க.எண் 49138 / அ3 / இ1 / 2022 நாள் 24.09.2022

.....

மேற்காண் பொருள் சார்பாக பார்வையில் கண்டுள்ள இணை இயக்குநரின் செயல்முறைகளின்படி வேலூர் மாவட்டத்தில் உள்ள அலுவலகம் மற்றும் அரசுப் பள்ளிகளில் பணிபுரியும் அனைத்து வகையான அமைச்சுப் பணியாளர்கள் புதிய உத்வேகத்துடன் செயல்பட தக்க வகையில் 01.06.2022 அன்றைய நிலையில் மூன்று ஆண்டுகளுக்கு மேல் ஒரே பணியிடத்தில் பணிபுரியும் நேர்முக உதவியாளர்கள் / கண்காணிப்பாளர்கள் / பதவி உயர்த்தப்பட்ட கண்காணிப்பாளர்கள் / உதவியாளர்கள் / இளநிலை உதவியாளர்கள் மற்றும் தட்டச்சர்கள் ஆகியோர்களுக்கு மாறுதல் வழங்கும் பொருட்டு உத்தேச பெயர் பட்டியல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

கடைபிடிக்க வேண்டிய நெறிமுறைகள்.

1. 01.06.2022 அன்றைய நிலையில் அலுவலகம் மற்றும் பள்ளிகளில் ஒரே பணியிடத்தில் மூன்று ஆண்டுகளுக்கு மேல் பணிபுரியும் அனைத்து அமைச்சுப் பணியாளர்களும் கலந்தாய்வில் கலந்துக்கொள்ள வேண்டும்.
2. உத்தேச பெயர் பட்டியலில் உள்ளபடி மாறுதல் கலந்தாய்வின்போது கலந்துக்கொள்ள வேண்டிய பணியாளர்கள் கலந்துக்கொள்ளாத நிலையில் அப்பணியாளர்களுக்கு நிர்வாக மாறுதல் அளிக்கப்படும்.
3. மாவட்ட கல்வி அலுவலகத்தை பொறுத்தவரை அனைத்து பணியாளர்களும் மாறுதல் கலந்தாய்வில் கலந்துக்கொண்டு மாறுதல் பெற வேண்டும்.
4. அனைத்து அலுவலகம் மற்றும் அரசுப் பள்ளிகளில் பணிபுரியும் பிற பணியாளர்கள் விருப்ப மாறுதல் கலந்தாய்வில் கலந்துக்கொள்ளலாம். இப்பணியாளர்கள் இதற்குறிய மாறுதல் விண்ணப்பத்துடன் இப்பணியில் சேர்ந்த பணிப்பதிவேட்டின் நகலினை அலுவலர் மற்றும் தலைமை ஆசிரியரின் மேலொப்பத்துடன் 26.09.2022 அன்று பிற்பகல் 12.00 மணிக்குள் சார்ந்த பணியாளர் வேலூர் மாவட்ட

முதன்மைக் கல்வி அலுவலக அ1 பிரிவு எழுத்தரிடம் நேரில் ஒப்படைக்கப்பட வேண்டும்.

5. மூன்று ஆண்டு பணிமுடித்த பணியாளர்கள் கட்டாய மாறுதலுக்கு உட்பட்டு இருந்த போதிலும் சில பணியாளர்கள் எதிர்வரும் பதவி உயர்வு முன்னரிமைப் பட்டியலில் இடம்பெற்றிருப்பின் அப்பணியாளர்கள் மாறுதல் கலந்தாய்வில் கலந்துக்கொள்ள வேண்டாம்.
6. இத்துடன் இணைக்கப்பட்டுள்ள உத்தேச பெயர் பட்டியலில் உள்ள பணியாளர்கள் தங்களது விவரங்கள் சரிபார்த்து மாறுபாடு இருப்பின் எழுத்து மூலமாக சரியான விவரத்தினை பணியாளர் மற்றும் சார்ந்த அலுவலர், பள்ளி தலைமை ஆசிரியர் கையொப்பத்துடன் 26.09.2022 அன்று பிற்பகல் 12.00 மணிக்குள் சார்ந்த பணியாளர் வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலக அ1 பிரிவு எழுத்தரிடம் நேரில் ஒப்படைக்கப்பட வேண்டும்.
7. இணைப்பில் கண்டுள்ள தேதிகளின் படி வேலூர் மாவட்டம். காட்பாடி, காந்திநகர் , ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி அலுவலகத்தில் நடைபெறும் மாறுதல் / பதவி உயர்வு கலந்தாய்வில் கலந்துக்கொள்ளும் பொருட்டு சம்மந்தப்பட்ட பணியாளர்களை குறிப்பிட்ட தேதிகளில் முகப்பு கடிதத்துடன் விடுவித்து அனுப்புமபடி சார்ந்த அலுவலர் மற்றும் தலைமை ஆசிரியர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.
8. **உத்தேச பெயர் பட்டியலில் இடம் பெறாமல்** 01-06-2022ன்படி மூன்று ஆண்டுகளுக்கு மேல் பணிபுரிந்து பணியாளர்கள் எவரேனும் இருப்பின் உடனடியாக வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலக அ1 பிரிவு எழுத்தரின் அலைபேசியில் **( 9952102135 )** தொடர்பு கொண்டு விவரங்கள் தெரிவிக்குமாறு அலுவலர்கள் மற்றும் பள்ளி தலைமை ஆசிரியர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்

(ஒம்). க. முனுசாமி
முதன்மைக் கல்வி அலுவலர்
வேலூர்

இணைப்பு

1. கலந்தாய்வு நடைபெறும் அட்டவணை
2. மாறுதலில் கலந்துக்கொள்ளும் பணியாளர்களின்
3. உத்தேச பெயர் பட்டியல்
   ( மூன்று ஆண்டு பணிபுரிந்வர்கள், பணி நிரவலில் உள்ள பணியாளர்களும்)
4. விருப்ப மாறுதல் கோரும் விண்ணப் படிவம்

பெறுநர்

1. ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி அலுவலகம் வேலூர்
2. மாவட்டக் கல்வி அலுவலர், வேலூர்
3. மாவட்ட உடற் கல்வி ஆய்வாளர் வேலூர்
4. அனைத்து வட்டாரக் கல்வி அலுவலகர்கள் வேலூர் மாவட்டம்
5. அரசு / நகரவை உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்கள் வேலூர் மாவட்டம்

# பதவி உயர்வு / மாறுதல் கலந்தாய்வு அட்டவணை

இடம் = ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி அலுவலகம் காந்திநகர்
காட்பாடி வேலூர் மாவட்டம்

நேரம் = காலை 09.30 மணி

| வ. எண் | கலந்தாய்வு நடைபெறும் நாள் | பதவி | கலந்தாய்வு விவரம் |
|---|---|---|---|
| 1 | 27–09–2022 | நிதிக்காப்பாளர் | மாநில அளவில் மாறுதல் கலந்தாய்வு |
| | | மாவட்டக் கல்வி அலுவலரின் நேர்முக உதவியாளர் / கண்காணிப்பாளர் / பதவி உயர்த்தப்பட்ட கண்காணிப்பளார் | மாவட்டத்திற்குள் மாறுதல் (Over three years transfer) |
| | | | மாவட்டத்திற்குள் விருப்ப மாறுதல் (Willing Transfer) |
| 2 | 28–09–2022 | நேர்முக உதவியாளர் / கண்காணிப்பாளர் / பதவி உயர்த்தப்பட்ட கண்காணிப்பாளர் | மாவட்டம் விட்டு மாவட்டம் விருப்ப மாறுதல் (Willing Transfer) |
| 3 | 29–09–2022 | நேர்முக உதவியாளர் / முறையான கண்காணிப்பாளர் / பதவி உயர்த்தப்பட்ட கண்காணிப்பாளர் | பதவி உயர்வு |
| | | உதவியாளர் / இளநிலை உதவியாளர் / தட்டச்சர் | மாவட்டத்திற்குள் மாறுதல் (Over three years transfer) |
| | | | மாவட்டத்திற்குள் விருப்ப மாறுதல் (Willing Transfer) |
| 4 | 30–09–2022 | உதவியாளர் / இளநிலை உதவியாளர் / தட்டச்சர் | மாவட்டம் விட்டு மாவட்டம் விருப்ப மாறுதல் (Willing Transfer) உதவியாளர்கள் பதவி உயர்வு |

(ஒம்). க. முனுசாமி
முதன்மைக் கல்வி அலுவலர்
வேலூர்

விருப்ப மாறுதல் படிவம்  செப்டம்பர் 2022

| | | |
|---|---|---|
| 1 | பெயர் | |
| 2 | பதவி | |
| 3 | பணிபுரியும் அலுவலகம் / பள்ளி | |
| 4 | பிறந்த தேதி | |
| 5 | இப்பதவியில் பணியில் சேர்ந்த நாள் | |
| 6 | தற்போது பணிபுரியும் அலுவலகம் / பள்ளியில் பணியில் சேர்ந்த நாள் | |
| 7 | விருப்ப மாறுதல் கோருவதற்கான காரணம் | |
| 8 | பணியாளரின் கையொப்பம் மற்றும் நாள் | |
| 9 | அலுவலர் / தலைமை ஆசிரியரின் பரிந்துரை | |
| 10 | அலுவலர் / தலைமை ஆசிரியரின் கையொப்பம்  மற்றும் நாள் | |
| 11 | குறிப்பு | |

குறிப்பு

1. பணிப்பதிவேட்டின் முதல் பக்க நகல் மற்றும் தற்போது பணிபுரிந்து வரும் அலுவலகம் மற்றும் பள்ளியில் பணியில் சேர்ந்த பணிப்பதிவேட்டின் பதிவு நகல் இணைக்கப்பட வேண்டும்.